# ஜான்பால் கல்லூரியில் தமிழ் இலக்கிய அரங்கம்




ரெட்டியார்பாளையம் போப் ஜான்பால் கல்லூரியில் சாகித்ய அகாடமி சார்பில் நடந்த இலக்கிய கருத்தரங்கில் கல்லூரி செயலர் சுவாமிநாதன் பேசினார்.

**புதுச்சேரி, ஜூலை 20–**

ரெட்டியார்பாளையம் ஜான்பால் கல்லூரியில், லூயி சவினியன் துப்புய் குறித்த தமிழ் இலக்கிய நிகழ்ச்சி நடந்தது.

சாகித்ய அகாடமி மற்றும் போப் ஜான்பால் கல்வியல் கல்லூரி இணைந்து நடத்திய இலக்கிய அரங்க நிகழ்ச்சியில், சாகித்ய அகாடமி தமிழ் ஆலோசனை குழு உறுப்பினர் யுகபாரதி தலைமை தாங்கினார். போப் ஜான்பால் கல்வியியல் கல்லூரி செயலர் சுவாமிநாதன், ஜோசப் அதிரியன் ஆண்டோ வாழ்த்துரை வழங்கினார்.

லூயி சவினியன் துப்புயின் சமய இலக்கியங்கள் எனும் தலைப்பில் ஆரோக்கியதாஸ், கடித இலக்கியம் என்ற தலைப்பில் ராஜா, கவிதை இலக்கியம் என்ற தலைப்பில் மாலிறையன், ஜெயசீலன் ஆகியோர் பேசினர். சுந்தர முருகன் நோக்க உரையாற்றினார்.